தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2022 கன்னி (அக்.—91) விலை உருபா 1·50 (இதழ் எண்: 148)

எனைச் சிறை செய்யினும் செய்க!

இதோ, நான் ஒருவன்
இங்கிருக் கின்றேன்!
எனைச் சிறை செய்யினும் செய்க!
ஈழத் தமிழரை
ஆதரிக் கின்றேன்!
என் தலை கொய்யினும் கொய்க!
அதோ, என் தமிழரைச்
சிங்களர் கொல்வார்!
ஆடும் என் சதை, நரம்பு எல்லாம்!
அடடா! உலகம்
கேட்டிடும்; பார்த்திடும்!
ஆயினும் அதன் மனம் கல்லாம்!

'எழுதினால் பேசினால்
சிறையிடு வோம்'—என
எந்தமிழ் அரசு கூ டிடுமா?
எவளோ ஒருத்தி
எமை ஆள் வதனால்
எம்முடல் உணர்வு மா றிடுமா?

பழுதிலாக் கொள்கையால்
உரிமை கேட் கின்றார்!
பதடிகள் அதைத்தவ றென்பதா?
பற்பல இளைஞர்கள்
பெண்கள் சா கின்றார்;
பார்த்துக்கொண் டே,மலம் தின்பதா?

இந்தியர் என்றால்
இரும்பு அவர் உள்ளம்!
ஈழத் தமிழர் எம் இனமே!
எங்கவர் வாழினும்
எம்மவர் அன்றோ?
இவர்க்குயிர் துடிக்கும்,எம் மனமே!
வெந்துயிர் விடுபவர்
மக்களே என்றால்
வெறும் அரசியல் நோக்கு எதற்கு?
வேற்று நாட் டினர் எனில்
பாலத் தீனர்,ஆப்—
பிரிக்கருக் கிரங்குதல் எதற்கு?

Scanned with CamScanner

ஆரவார, ஆடம்பர ஆரவல்லி அரசு!

'அவன் கிடக்கிருன் குடிகாரன்; எனக்கு இரண்டு பள்ளாவில் ஊற்று' என்பது பழமொழி. அஃதாவது பிறரைக் குற்றம் கூறுகிறவன், தானும் அக்குற்றங்களையோ அல்லது அதற்கு மிகுதியாகவோ செய்வானுனல், அவனுக்காகக் கூறுகிற பழமொழி இது!

செயலலிதா பதவிக்கு வரும் முன் திமுக அரசின் மேல், குறிப்பாகக் கலைஞர் கருணாநிதியின் மேல் நாளொரு குற்றமும் பொழுதொரு பழியுமாகத் தூற்றிக் கொண்டிருந்தார்.

'அவர் மதுக் கடைகளைத் திறந்தார்; கையூட்டு வாங்குகிருர்; அவர் ஆட்சியில் ஊழல்கள் பெருகி விட்டன; அரசுப் பணததை ஆடம்பரமாகச் செல விடுகிருர்; விளம்பர வெறி பிடித்தவர் கருணாநிதி; ஏழைகளுக்கு வேட்டி, சேலை கொடுத்து ஏமாற்று-கிருர்; விழாக்களை அதிகமாகக் கொண்டாடுகிருர்; நாட்டில் சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டது; காவல் துறைக் கெடு பிடிகள் மிகுதி; காவலர்கள் ஆட்சியே நடை பெறுகிறது; வன்முறைகள் அதிகம்; நாட்டில் அமைதியில்லை; தொழிலாளர் போராட்டங்கள்; வேலை நிறுத்தங்கள் மிகுதி; கடையடைப்புகள் அதிகம்; இவர் ஆட்சியில் மக்களுக்குப் பாதுகாப்பில்லை; பழிவாங்குவது அவர் இயல்பு; விலைவாசிகளெல்லாம் மலையென ஏறிவிட்டன—என்றெல்லாம் மக்களிடத்தில் அந்த அரசின் மேல் குறைகள் கூறிக் கொண்டே இருந்தார்.

அதன் பின தேர்தல் அறிவிப்பு நடந்தது! இராசீவ் கொலை செய்யப் பட்டார். உடனே இராசீவைப் புலிகளைத் தூண்டி விட்டுக் கருணாநிதி தான் கொன்ருர்; புலிகளை அவர் வளர்த்து விடுகிருர்! புலிகளைத் தூண்டிவிடுகிருர். நாட்டின் ஒற்றுமைக்கு—ஒருமைப் பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கிருர்! இவர் தொடர்ந்து ஆண்டால் நாடு சுக்கல் நூருகப் பிளவு படும்; அந்த அளவுக்கு இவர் பிரிவினையைத் தூண்டுகிருர்—என்றெல்லாம் ஓயாமல் குறைகளையும் குற்றங்களையும் கூறிக் கொண்டே இருந்தார்,

இவற்றுடன் தேர்தலில், இல்லாததையும் பொல்லாததையும் தங்கள் கட்சியின் தேர்தல் கொள்கைகளாக அறிவித்தார். எப்படியோ மக்களை ஏமாற்றினர். மக்களும் இவரின் தனிப்பட்ட, கவர்ச்சிக்கு ஒரு பங்கு; இவர் கட்சியின் நிறுவனரான ம.கோ.இரா வின் மேல் கொண்ட திரைப்பட வெறிக்கு ஒரு பங்கு; இராசீவின் சாவுக் கெனக் கொண்ட இரக்கத்திற்கு ஒரு பங்கு; தி.மு.க.வின் மேல்—குறிப்பாக,. கருணாநிதியின் மேல் கொண்ட வெறுப்பிற்கும் சலிப்பிற்குமாக ஒரு பங்கு; ஒரு புதிய மாறுதலை விரும்பியதற்காக ஒரு பங்கு—என ஏமாறி ஒப்போலைகளை இவர் கட்சிக்கு வாரி வழங்கினர். ஒட்டு மொத்தமாக இவர் காட்டில் புயலும் மழையுமாகப் பொழிந்து தள்ளியது. எதிர்க்க ஓர் ஆளே இல்லாமல் தனிக்காட்டு அரசியாக இவரைக் காலம் ஆட்சியதிகாரக் கோபுரத்தின் உச்சியிலேயே கொண்டு போய் வைத்து விட்டது.

ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த இந் நடிகை நாயகிக்கு அதிகார வெறி உச்சிவரை ஏறியது. தாம் நினைப்பதை யெல்லாம் தகுதி பெற்றதாக எண்ணித் தருக்குற்ருர்; செருக்குற்ருர்; இலவயமாகக் கிடைத்த பெரும் பொருளை ஓர் ஊதாரி வாரி இறைப்பதைப் போல, நயனிலான் பெற்ற செல்வம் பயனில்லா வகையில் பாழாய்ப் போவதைப் போல, 'ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை பெருஞ் செல்வம் உற்ற கடை' என்னும் திருவள்ளுவரின் திருவாய் மொழிக் கேற்ப, இவர்க்கு வாராமல் வந்த வானளவு அதிகாரத்தை, இவர் மக்களை அடக்கி ஒடுக்கி அச்சுறுத்தப் பயன்படுத்திக் கொண்டு வருகிருர்.

பற்றும் பற்ருமைக்கு இவரின் அரசியல் அடி-யார்கள் வேறு இவரை வாய்க்கு வந்தபடி யெல்லாம் வானளாவ—வஞ்சகமாய்ப் புகழத் தொடங்கி விட்டனர்.

'புரட்சித் தலைவி' என்றும், புலியாளப் பிறந்த 'புதுமைப் பெண்' என்றும் 'கழகத்தின் காவல் தெய்வம்', 'இதயத் தெய்வம்', 'காவிரி தந்த கலைச் செல்வி' 'ஆறு கோடித் தமிழக மக்களின் நம்-பிக்கை நட்சத்திரம்' 'தமிழகத்தின் தியாகச் சுடர்' 'இடைக் காலத்தில் சாய்ந்து விட்ட சட்டம் ஒழுங்கை மீண்டும் தமிழ் மண்ணில் நிலை நிறுத்-திய நீதி தேவதை' 'புதிய சரித்திரம் படைக்கப் புறப்பட்ட புரட்சித் தலைவி' 'சொல்வேக மின்றிச் செயல்வேகம் காணும் புதிய தத்துவத்தின் புனித நாயகி' 'தொழிலாளிகளின் துயரை அறிந்தவர்' என்றும், 'தமிழகம் காத்திட வந்த தமிழ்த்தாய்' 'புரட்சித் தலைவர் எம்.சி.ஆரின் அரசியல் வாரிசு' என்றும், 'தமிழ் காக்கும் தலைவி' 'மதுவை ஒழித்துத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்த பெண்ணரசி' என்றும், 'துணிச்சலுடன் நட-வடிக்கை எடுக்கும் வீராங்கனை' மக்கள் மனத்தில்

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம்)

கருத்துரிமை, எழுத்துரிமைகூட ஒடுக்கப்படுகிற செயலலிதாவின் முற்றாளுமை ஆட்சியின் வெறிச் செயல்!

கழக முதல்வர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள்

சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்!

- கருத்துரிமை, எழுத்துரிமைகூட ஒடுக்கப்படுகிற செயலலிதாவின் முற்றுளுமை ஆட்சியின் வெறிச் செயல்!
- தென்மொழி அச்சகம் தேடுதல் ஆய்வு செய்யப் பெற்றது.
- அச்சாகிக் கொண்டிருந்த தமிழ்நிலம் அனைத்தையும், தென்மொழி (சுவடி: 26 ஓலை: 2)--பல படிகளையும் பறிமுதல் செய்து எடுத்துச் சென்றனர்.
- 23-9-91 அன்று மாலை 4-00 மணியளவில் சென்னை-பெருநகர நடுவண் குற்றப் புலனாய்வுத் துறையினர் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அச்சகத்தில் ஆய்வு நடத்தியதோடு, ஐயா அவர்களையும் தளைப்படுத்திச் சென்றனர்.
- சிறைக்குள் பொது முறையிலேயே தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.
- சிறையிலும் சரிவர நடத்தாமல் மிகவும் கெடுபிடியாகவே நடத்துகின்றனர் சிறை அதிகாரிகள்.

செயலலிதாவின் ஆளுமை வெறித்தனம் கொடிகட்டிப் பறக்கிறது!

கடந்த 23-9-91 அன்று மாலை 4-30 மணிக்கு சென்னை நடுவண் குற்றப் புலனாய்வுத் துறையினரால் பாவலரேறு ஐயா அவர்கள் தளைப்படுத்தப் பட்டார்கள். தென்மொழி அச்சகத்தில் இருந்த ஐயா அவர்களைப்புலனாய்வுந்துறைக் குழு உசாவியதோடு, அச்சகத்தையும் ஆய்வு நடத்தி தமிழ் நிலம் இதழ் 148-இற்கென அச்சிட்ட படிவங்களையும், தென்மொழி (சுவடி: 26 ஓலை; 2)—இதழ் படிகள் எஞ்சியிருந்தவற்றையும் பறிமுதல் செய்து எடுத்துச் சென்றனர்.

ஐயா அவர்களை 2F (1) (2) (13), 153 IPC, 505IPC ஆகிய குற்ற எண்களின் கீழ்த் தளைப் படுத்திய அவர்கள், அன்று இரவு 8-30 மணி அளவிற்குச் சென்னை — நடுவண் சிறைசாலைக்குள் அழைத்துச் சென்றனர்.

அதற்கு முன் சென்னை எழும்பூர்-10-ஆம் எண் முதல் வகுப்பு அறமன்ற நடுவரிடம் ஐயா அவர்கள் ஒப்படைக்கப் பட்டார்கள். கடந்த 8-9 91 அன்று தலைநகர்த் தமிழ்ச் சங்கம் நடத்திய 'தமிழர் பாது

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

ஆரவார ஆடம்பர...

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மங்கா இடம் பெற்ற தமிழகத்தின் தலை சிறந்த தலைவி,' தமிழகத்தின் நிரந்தர முதலவர்' என்றும், 'வணங்கத் தகும் புனிதத் தாய்' 'திராவிடர் இயக்கத்தின் வழித் தோன்றல்' என்றும், தென்னகத்து அரிமா' என்றும், 'தென்னாட்டு இந்திரா காந்தி' என்றும், 'அவர் பொற்பாதம் படும் இடமெல்லாம் பசிப் பிணி அகன்று மகிழ்ச்சி பெருகிடும்' என்றும், பொருளில்லாப் புரைதரும் சொற்களால் அவரின் புகழ் பாடுகின்றன. இவ்வாறு அவரைப் புகழ்கின்ற புல்லியர்கள் பணம் கருதிப் பதவி கருதி, நலன் கருதி, வளங் கருதி அரசியல் களத்தில் காலடி வைக்க வந்த க.இ. (பி.ஏ.), க.மு. (எம்.ஏ.), அறி.இ. (பி.எசி.), க.இ ,ச.இ.(பி.ஏ.பி.எல்),வணி, இ.,ச.இ. (பி.காம்.பி.எல்), அறி.மு. (எம்.சி). க.மு-,ச,இ. (எம்.ஏ.பில்) போன்ற பட்டப்படிப்புப் படித்துத் தங்களை மேதைகளாக விளம்பரப் படுத்திக் கொள்ள விரும்பிய வீணர்களே!

இல்லெனில் 'புரட்டுத் தலைவி'யைப் 'புரட்சித் தலைவி' என்பார்களா? என்ன புரட்சியை இவர் செய்தார்? அரசியலில் முதலமைச்சராக வருவது புரட்சி என்றால், அது படிக்காத மேதை காமராசர் ஒருவருக்குத் தானே பொருந்தும்.

'புவியாளப் பிறந்த புதுமைப் பெண்' என்பதற்கு இவர் செய்த புதுமை தான் என்ன?

'காவல் தெய்வம்' என்று இவரைக் குறிப்பிடும் மூடர்கள், இவருக்கே காவலாக நிற்கும் கறுப்புப் பூனைப் படை எதற்கு என்று கருத வேண்டாமா?

'இதய தெய்வம்' இவரென்றால், எம்.சி. ஆரையும் அண்ணாவையும் அதே சொற்களால் புகழ்வது இழுக்கன்றோ?

'காவிரித் தந்த கலைச் செல்வி' என்றால், காவிரி நீர் தமிழகத்திற்குக் கிடைக்காமல் இருப்பது ஏன்? அதைத் தமிழகத்திற்குத் தராமல் செய்த கன்னட முதல்வர் பங்காரப்பவை என்ன செய்வது?

'6 கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் இவர்' என்பது இவர் திரைப்படக் கவர்ச்சி நடிகை என்பதாலா?

'தமிழகத்தின் தியாகச் சுடர்' என்று இவரைப் புகழ்கின்றவர்கள் இவர் என்ன 'தியாகம்' செய்தார் என்பதற்கு விடை கூற முடியுமா?

'இவரை 'நீதியின் தேவதை' என்பவர்கள், எந்த வழக்கில் இவர் நடுநிலை பிறழாமல் நீதி கூறினார் என்பதை எடுத்துக் கூறுவார்களா?

இவ் வகையில் இன்னும் வினாக்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றை ஏன் இங்குக் கேட்கிறோம், திறனாய்வு செய்கிறோம் எனில், பிறரைப் புகழ்வதிலும் ஒரு பொருளாகிலும் அல்லது கொஞ்சம் உண்மையாகிலும் இருக்க வேண்டும் என்பதை எல்லார்க்கும் உணர்த்துவதற்காகத் தான். இவை எல்லாம் பொய்ப் புகழ்ச்சி என்பதை அவரை இவ்வாறு புகழ்கின்ற பொய்யர்கள் இனியாகிலும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இனி, இந்த அம்மையாரைத் 'தமித்தாய்' என்றும், பெண்ணரசி 'வீராங்கனை' என்றும், 'புனிதத் தாய்' என்றும், 'தென்னகத்து அரிமா' என்றும். 'தென்னாட்டு இந்திரா காந்தி' என்றும் புனைந்து கூறும் உரைகள் யாவும் புரையானவை, வெட்கப் படத் தக்கவை, அளவுக்கு மிகவும் மீறியவை என்றும், முட்டாள்களின் உளறல்கள் என்றும் அவர்களுக்கு விளங்காமற் போனது ஏன்?

இவரைப் போய்த் 'தமித்தாய்' என்று அழைப்பதற்கு நாம் அவமானப் பட வேண்டாமா? தமிழ்த் தாய் என்ன திரைப்பட நடிகையா?

இவர் வீராங்கனை என்றால் இவர் எந்தப் போர்க்களத்தில் இறங்கி வெற்றி பெற்றார்? அரசியல் களம் என்றால், அது எருமைகளும், கயவர்களும், திருடர்களும், ஒழுக்கக் கேடர்களும் புகுந்து குழப்பும் சேற்றுக் குட்டையாயிற்றே! மலக்குழி ஆயிற்றே! புன்மைக் கிடங்கு ஆயிற்றே! இவர் அதிலிறங்கி வெற்றி பெற்றார் என்றால், இவரின் சிறப்பு என்பது, அவ்வாறான தகைமையற்றவர்களுக்குள் தலையாயவர் என்றென்றே பொருள் தரும். அன்பர்கள் நன்றாக எண்ணிப் பார்த்து முடிவெடுக்கக் கேட்டுக் கொள்கிறோம். இவ் விழிவு நிலை எதற்கு?

'தமிழ் காக்கும் தலைவி'—என்று இவரை அழைக்க விரும்புபவர், இவரிடம் உள்ள எந்தத் தகுதி பற்றிக் கூறினாரோ, அவருக்குத் தான் தெரியும்! தமிழை அந்த அளவுக்கு எளிதாகக் காத்து விட முடியும் என்றால், எங்களைப் போன்றோர் முயற்சிகள் தாம் எதற்கு என்பதற்கும் அன்னவர்கள் தாம் விடை கூறல் வேண்டும்.

இனி, இவரை, 'மதுவை ஒழித்துத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்த பெண்ணரசி' என்று கூறுபவர்கள், 'மது எங்கே ஒழிந்தது' என்பதற்கும் நல்ல விடை கூறியாகல் வேண்டும். தமிழ் நாடு முழுவதும் இன்றும் 30 ஆயிரம் இடங்களில் கள்ளச்சாராயம் காய்ச்சப் படுவதாக வருவாய்த் துறை அமைச்சர் எசு.டி.சோமசுந்தரமே சட்ட மன்றத்தில் வெட்ட வெளிச்சமாகத் தெரிவித்துள்ளார். மேலும், கள்ளச்சாரயம் விற்பனை செய்யும் முதலாளிகள், அம்மையார் அவர்களின் கைக்களுக்குள்ளன்றோ மறைந்து கிடக்கின்றார்கள்! இனி, வெளி நாட்டு மதுக்கடைகள் வீதி வீதியாகத் தம்

(4-ஆம் பக்கம் தொடர்ச்சி)

வாய்களைப் பிளந்து கொண்டு கிடப்பதையும், அங்கு வெளி நாட்டு மதுச்சரக்குகள் முன்பை விட இக்கால் இரட்டை மடங்கு விற்பனை கூடியிருப்பதையும் அப் புகழ் பாடிகள் பார்க்க வில்லையோ?

அடுத்து, இவரை 'தமிழகத்தின் தலை சிறந்த தலைவி' என்று புகழ்வது, இவர் திரைப்படங்களில் கதைத் தலைவியாக நடித்துள்ளாரே, அதற்காகவா?

இன்னும், அவரை, 'தமிழகத்தின் நிரந்தர முதல்வர்' என்பது எள்ளி நகையாடுதற்குரிய கருத்தன்றோ? அரசியலில் எவர் நிலையானவர்? எவர் நிலையில்லாதவர் என்று சொல்லவும் கூடுமோ? இஃதென்ன வேடிக்கை. இவ்வாறு வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று புகழ்வதால் யாருக்கு என்ன பயன் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாவா?

இன்னும் இவரைத் 'தென்னகத்து அரிமா' என்றும், 'தென்னாட்டு இந்திரா காந்தி' என்றும் வெற்றுப் புகழ்ச்சிக்கு இவரை இரையாக்குவது, இவர் மேல் வைத்த மதிப்பைக் காட்டுவதாகத் தெரியவில்லை, இவ் வஞ்சகப் புகழ்ச்சி உரைகள் இயல்பான சிறப்பைக் கூட குறைப்பதாகவும், கீழ்மைப் படுத்துவதாகவுமே உணர முடிகிறது. இத்துணை வெறித்தனமும், இழிவுணர்வும் எந்தமிழ் மக்களுக்கு, அதுவும் பட்டந் தாங்கித் தமிழர்களுக்கு வந்து வாய்த்ததே என்று நாம் இரக்கப் படவுமே வேண்டியிருக்கிறது. என் செய்வது? நம் நிலை அந்த அளவுக்குத் தாழ்வுற்றுக் கிடக்கிறதே என்று வருந்துவதைத் தவிர நம்மால் வேறொன்றும் செய்ய முடியவில்லையே!

இவர் பற்றிய இவ் வெற்றாரவாரப் புகழ்ச்சியுரைகள் ஒரு புறம் இருக்கட்டும்! இவரின் செயல்பாடுகள் இன்னும் நாம் வெட்கத் தகுந்தனவாகவுமே அமைந்திருப்பதை நம்மால் எண்ணிப் பார்க்க முடியாமல் இல்லை.

முதலில், இவர் ஆட்சியில் அமைந்தது முதல் இனிமேல் செய்ய விருப்பதாகக் கூறி வருவனவாகிய, தமிழ்க் கல்விக் கட்டாயப் படிப்பு, ஏழைகளுக்கு இலவயமாக விடு கட்டித் தருதல், மலிவு விலை மது ஒழிப்பு, அதன் அடிப்படையாகக் கூறும் முழுமையான மது விலக்கு, பிற்படுத்தப் பட்டவருக்கும், தாழ்த்தப் பட்ட,மலைவாழ் மக்களுக்கான சலுகை அறிவிப்புகள், காவிரி நீர்ச் சிக்கல் தொடர்பாக எடுக்க விருக்கும் தீர்வு நடவடிக்கைகள், கச்சத் தீவு தீர்வுப் பேச்சுகள் முதலிய அனைத்தும் வெறும் திட்டக் கோட்பாடுகளே! இவற்றைச் செயல்படுத்துவது மிக மிகக் கடினம் என்பது இவருக்கும் தெரியும்! பிறருக்கும் தெரியும்! வெறும் அறிவிப்புகளும் கொள்கைகளும் செயல் திட்டங்களுமே செயல்களாகி விடா. கடந்த காலங்களில் இவர் கட்சியின் நிறுவனர் ம.கோ.இரா. தாம் நடித்தத் திரைப்படங்களில் பாடல்கள், உரையாடல்கள் வழி தெரிவித்த அரசியல், பொருளியல், குமுகவியல் சீர்திருத்தங்களைப் போன்ற, வெறும் கற்பனைத் திட்டங்களே பெரும்பாலானவை. முன்னாள் தலைமையமைச்சர் மண்டல் குழு அறிக்கை ஒன்றைச் செயலுக்குக் கொண்டு வருவதற்குச் செய்த முயற்சிகளும், பட்ட பாடுகளும், சந்தித்த எதிர்ப்புகளும்,அவற்றால் அவர் பதவியிழக்க நேர்ந்ததையும் ஆழ உணர்ந்தவர்கள், செயலலிதாவின் திட்ட அறிவிப்புகளில் உள்ள கவர்ச்சிகளையும் வெற்றாரவார உணர்ச்சிகளையும், அவற்றைச் செயலுக்குக் கொண்டுவருவது மிகவும் கடினம் என்பதையும் நன்றாகவே உணர்வர்.

மேலும், செயலலிதா செய்ய விரும்புவதாக அறிவிக்கும் அனைத்துச் சீர்திருத்தங்களும், இன, முன்னேற்ற முயற்சிகளும், வீட்டின் உள் புறத்தையும் வெளிப்புறத்தையும் வண்ணமடித்துச் சுவடிப்பு (அலங்காரம் செய்து பழுது பார்ப்பதைப் போன்றனவே! ஆனால்; வீடு கடனில் மூழ்கியிருப்பதையும், நமக்கு முழு உரிமையில்லாமல் இருப்பதையும், நமக்கு வேறான—மாறான—ஒரு சிலரின் ஆளுகைக்கு உட்பட்டிருப்பதையும் அவை மீட்டுக் கொடுக்கா. எனவே தான் தமிழின உரிமை மீட்பு முயற்சிகள் நமக்குத் தேவை. அது தான் இவ் வினத்தை நிலையான உறுதிக்கும், உறுதிப்பாடான—இறைமை சான்ற ஆளுமைக்கும் வழியமைத்துக் கொடுமைக்கும். அவ்வாறின்றி, இன்றைய நிலையில் நம் தமிழ்நாடு. வட விந்திய,இந்தி(ய) முதலாளிகளுக்கும், ஆரியப் பார்ப்பனியத்திற்கும், பொய்யான—புரை சான்ற இந்து மத ஆளுமைக்கும் உட்பட்டு—அடிமைப் பட்டுக் கிடப்பது என்றைக்குமே குமுகாய நிலையில் தமிழினத்தையும், அரசியல், பொருளியல் நிலையில் தமிழ் நாட்டையும் உயர்த்துவதற்கு அம் முயற்சிகள் இம்மியும் உதவா. அத்துடன், அவ்வப்பொழுது நமக்குக் கிடைக்கும் அல்லது ஏற்படுத்திக் கொள்ளும், சிறு சிறு, அரசியல் பார்ப்பன வாழ்க்கை நலன்கள், நம் நிலையான உரிமை மீட்பிற்கும் அடிமை நீக்க முயற்சிகளுக்கும் ஒருவகையில் தடையாகவும் எதிராகவுமே இருக்கும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

தமிழர்களின் இத்தகைய மீட்புக்கும், நாட்டு அடிமைத்தன நீக்கத்திற்கும் செயலலிதாவின் முயற்சிகளும் சீர்திருத்தங்களும் எள்ளளவும் பயன் தரா என்பதையும், அவற்றைச் செய்வதற்குரியவராக அவர் இல்லை. என்பதையும் அந்நிலைக்குக் கரணியம் அவரும் அவ் வாரியப் பார்ப்பன வல்லமையின் ஒரு கூறாகவே இருக்கிறார் என்பதையும் நாம் நன்கு எண்ணிப் பார்த்து, அவரின் ஆடம்பர, ஆரவார அரசியல் முயற்சிகளைக் கண்டு, மதியும் மனமும் மயங்கிக் கிடப்ப

Scanned with CamScanner

தமிழகத்தில் தீண்டாமை!

இந்தியா குடியரசு உரிமை பெற்று 44 ஆண்டுகளாகியும், இந்தியாவில் ஒழிக்கப் படாத ஏழ்மை, அறியாமை, மதச் சண்டைகள், சாதிப் பூசல்கள் இன்னும் இருந்து வருவது பெரிதும் வருந்த தக்கது.

தீண்டாமை என்பது சாதி அமைப்புகளிலேயே மிகவும் கொடுமையானது. இந்தியாவில் உள்ள 85 கோடி மக்களில் ஏறத்தாழ 15 கோடிப் பேர் தீண்டாமையின் கொடுமைப் பிடியில் சிக்கி இன்னும் தவித்துக் கொண்டிருப்பது உரிமை (சுதந்திர) இந்தியாவிற்கே ஒரு பெருத்த அவமானமாகும்.

அண்மையில் தமிழக அரசு செய்த ஆய்வுப்படி, தமிழகத்தில் மட்டும் இன்னும் 4271 சிற்றூர்களில் (கிராமங்களில்) தீண்டாமைக் கொடுமை இருப்பதாகத் தெரிவிக்கப் பெற்றுள்ளது.

பலவேறு வகையான தீண்டாமை ஒழிப்பு முயற்சிகள், சட்ட திட்டங்கள், அரசு நடைமுறைகள் செயல்பட்டு வந்தாலும் தீண்டாமை இன்னும் நாட்டில் ஒழிந்த பாடில்லை.

பல்வேறு சிற்றூர்களில் தாழ்த்தப் பட்டவர்கள் இன்னும் காலணிகள் அணிந்து செல்வதற்கு அனுமதிக்கப் படுவதில்லை.

பெண்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்வதும் தடுக்கப்பட்டு வருகிறது.

தேநீர்க் கடைகளில் இன்னும் அவர்களுக்கென்று தனிக்குவளைகளில் தாம் தேநீர் தரப் பெறுகிறது.

பொதுச் சுடுகாடுகளில் தாழ்த்தப் பட்டவர்களின் உடல்களை எரிக்க விடுவதில்லை. அவர்களுக்கென்று தனிச் சுடுகாடுகள், இடுகாடுகள் இருப்பினும் அவற்றுக்குச் செல்ல வழிகள் விடுவதிலும் சிக்கல்கள் எழுப்பப் படுகின்றன.

பல ஊர்களில், குறிப்பாக மிக முன்னேறிய சென்னையிலும் கூட அவர்களுக்குக் குடியிருக்க வாடகை வீடுகள் விடப் படுவதில்லை. சென்னையில் மேட்டுக்குடி மக்களே பெரும் பகுதி வாழும் திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், தியாகராய நகர் போன்ற இடங்களில் அவர்கள் வாடகைக்கு வீடுகள் அமர்த்த முடியாத நிலை இன்னும் இருந்து வருவது இந்தக் கொடுமைக்கான தலையாய எடுத்துக் காட்டு.

சென்னையில் சில தனியார் பள்ளிகளில் அச் சாதி மாணவர்களுக்கு இடம் தரப்படுவதில்லை என்பது இன்னும் கொடுமையாகும்!

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு மாநாட்டில்' ஐயா அவர்கள் தமிழின உரிமையை வலியுறுத்திப் பேசிய பேச்சின் அடிப்படையிலேயே தளைபடுத்தப் பட்டுள்ளதாகவும், அங்குப் பேசப்பட்ட பேச்சுகள் உண்மையா என்றும் நடுவர் கேட்க அதற்கு ஐயா அவர்கள் தம் மாநாட்டில் பேசியப் பேச்சின் உரைச் சுருக்கத்தைக் கூறினார்.

சிறைக்குள், தனிச் சிறையில், முறையாக உணவு கொடுக்காமல் அதிகாரிகள் செய்யவே அதைப் போராடியே சீர் செய்ய முடிந்தது.

உ.த.மு.க. பொறுப்பாளர்கள் ஆங்காங்கு கண்டனக் கூட்டங்களும், அறிக்கைகளும் கருத்துப் பரப்புதல்களும் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வரும் 7-10-91 திங்கள் கிழமை அன்று காலை 10 மணியளவில் ஐயா அவர்கள் சென்னை எழும்பூர் வழக்குமன்றம் அழைத்து வரப்பட உள்ளார்கள்.

அன்று உ.த.மு.க. அன்பர்கள் வருகை தருமாறு உ.த.மு.க. நடுவக்குழு சார்பாக நடுவக் குழுவர் புலவர் தி.மு.அரசமாணிக்கனார் கேட்டுக் கொள்கிறார்.

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ ஓ தமிழர்களே!

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத்தாள் பதிப்பு: 9-00
செய்தியச்சுத்தாள் பதிப்பு: 6-50
இஃது ஒரு புதிய வெளியீடு.

பதிவுக்கொடுப்பு அஞ்சல் செலவு: 3-00.
தென்மொழி, சென்னை-5

தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு விலையேற்ற அறிவிப்பு!

அச்சீட்டுத் தாள்களும் மை முதலிய அச்சுப் பொருள்களும் கடுமையாக விலையேறியுள்ளதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய நம இதழ்களின் விலைகளையும் உயர்த்த வேண்டுவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

	தனியிதழ்	ஆண்டுக் கட்டணம்.	அரை ஆண்டு	வாணாள் கட்டணம்.
தென்மொழி	3-00	36-00	18-00	500-00
தமிழ்ச்சிட்டு	1-50	18-00	10-00	250-00
தமிழ்நிலம்.	1-50	36 00	18-00	500-00.

Scanned with CamScanner

வழக்கறிஞர் பக்தவத்சலத்தை அரசு சிறைப்படுத்தியதற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் கண்டன அறிக்கை!

தி.மு.க. ஆண்டபொழுது, விடுதலைப் புலிகளை ஆதரித்தவர், தூண்டிவிட்டவர், தாம் ஆளுகிற பொழுது அவர்களை அடக்கி ஒடுக்குவதா?

இன்றைய தமிழக முதல்வர் செயலலிதா தமிழீழ விடுதலைப் புலிகளின் மேல் தெரிந்தோ, தெரியாமலோ தொடுத்துள்ள போர், உலகத் தமிழின மக்களின் மேல் தொடுத்த இன அழிப்புப் போராகும்!

இவர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, இராசீவின் கொலையைச் சாக்காக வைத்துக் கொண்டு, இலங்கை சிங்களவர்களின் படுகொலைக்கு அஞ்சி அரண்டு தமிழகத்திலும் இந்தியாவிலும் மற்றும் உலகெங்கிலும் அடைக்கலம் புகுந்துள்ள ஏழை ஏதிலி(அகதி)களையும், இங்கு வந்துள்ள விடுதலைப் புலிகளையும் அச்சுறுத்தியும் அடக்கியும், ஒடுக்கியும், அழித்தும் வருவதே அவரின் அரசியல் நடவடிக்கையாக இருந்து வருவதை இங்குள்ள அனைத்துப் பொதுமக்களும் நன்கு அறிவர்! 'விடுதலைப் புலிகளைத் தமிழ் நாட்டை விட்டு விரட்டுவேன்! அவர்களின் விடுதலைப் போராட்டத்தை வேரறுப்பேன்! அவர்களுக்காக இரக்கப் படுபவர்களையும் ஆதரவு தருபவர்களையும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தால் அடக்குவேன்; ஒடுக்குவேன்! சிறையில் தள்ளுவேன்!'—என்பதே அவர் வெறி முழக்கமாக இருந்து வருகிறது.

இவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர்—அ'தாவது எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி ஆட்சி நடத்திய பொழுதைய 1988-90-களில் இவர் அவ்வப் பொழுது, விடுதலைப் புலிகளை அவர் ஆட்சிக்கு எதிராகத் தூண்டிவிடும் நோக்கத்துடன்,

'விடுதலைப் புலிகளின் போராட்ட முயற்சிகளை நாம் மதிக்க வேண்டும். அவர்களுக்கு எல்லா வகையிலும் தலைவர் எம்.ஜி.ஆரைப் போல் ஆதரவு தர வேண்டும். அவர்கள் நாட்டில் அவர்களுக்கு நடக்கும் கொடுமைகளுக்கு எதிராகவே அவர்கள் போராடுகிறார்கள். அவர்களின் போராட்டத்தை நாம் ஆதரித்து, அதற்கு உதவவில்லையானால், அங்குள்ள தமிழினமே அழிந்துவிடும்! எம். ஜி. ஆர். அவர்களை ஆதரித்ததோடன்றி அவர்களுக்கு உதவவும் செய்தார். ஆனால் கருணாநிதி அவர்களுக்கு உதவவில்லை'

—என்றெல்லாம் குரல் எழுப்பியவர்தாம், இந்த செயலலிதா!

ஆனால், அவரே தமிழக ஆட்சியைக் கைப்பற்றிய பின், அவர் குரல் வேறாகவும் விடுதலைப் புலிகளுக்கு மாறாகவும் ஒலிக்கிறது!—இந்த இரட்டை அரசியல் நடிப்பை மக்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

—இராசீவ் முன்பு அமைதிப் படை — என்னும் பெயரால் இங்குள்ள இந்தியப் படைகளை ஈழத்திற்கு அனுப்பி, அங்குள்ள தமிழர்களில் எட்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்களைப் படுகொலை செய்தார்! ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டவர்களைப் படுகாய முறச் செய்தார்

—இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட, எட்டு ஆண்டு முதல் நாற்பத்தைந்து ஆண்டு வரையுள்ள சிறுமியர்களையும், இளம் பெண்களையும், தாய்மார்களையும், கருவுற்ற பெண்டிர்களையும் கற்பழித்துக் கொன்று குவித்துள்ளார்!

அவ் வறக் கொடிய படுகொலையைக் கண்டு அஞ்சிய ஏழை எளிய இலங்கைத் தமிழ் மக்கள் இவ் வுலகெங்கும் சிதறியோடி, அடைக்கலம் புகுந்து, நாள்தோறும் கால் பட்டினியும், அரைப் பட்டினியும், முழுப் பட்டினியுமாகச் செத்தும், சாகாமலும் உயிர்தப்பி வாழ்ந்து வருகின்றனர். இக் கொடுந்துயரச் செயல்களுக்கிடையில் தான் இங்கு செயலலிதா, இராசீவின் சாவை முன் வைத்துத் தமிழக அரசியலைக் கைப்பற்றி, ஆட்சி அமைத்தார்!

அவர் ஆட்சியமைத்த கடந்த இரண்டு மூன்று மாதங்களாய்,

—இங்குள்ள ஆட்சி அதிகாரச் சார்பில் நஞ்சு போல் ஏறிவரும் அன்றாட உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை, இவர்.

—இங்குள்ள ஏழை எளிய மக்களின் பசி, பட்டினியைப் போக்க எந்த ஒரு முயற்சியும் செய்திட்டவில்லை, இவர்.

—வேலையில்லாமல் திண்டாடித் தெருவில் அலைந்து கொண்டிருக்குப் பல்லாயிரக் கணக்கான படித்த இளைஞர்களுக்கும், படிக்காத வாலையர்களுக்கும் தொழிலமைப்பு வாய்ப்புகளை உருவாக்கித் தரவில்லை, இவர்.

—ஆனால், இங்குள்ள தமிழீழ மக்கள் அனைவர்க்கும் புலிகள் என்னும் முத்திரையைக் குத்தி, அவர்

களைக் காவல் துறையின் முரட்டுத் தன்னதிகாரப் போக்கைக் கொண்டு சிறைப் பிடிப்பதும், தொன்றொழிப்பதும், அவர்களைத் தற்கொலை செய்து கொண்டு இறக்கச் செய்வதுமாக 'நரபலி' நாட்டியம் ஆடி வருகிறார்.

—அதே நடைமுறையில் இங்குள்ள தமிழின நிலக்கிழார்களையும், தொழிலதிபர்களையும், இனமான உணர்வுள்ள இளைஞர்களையும் காவல்துறை உசாவல் (விசாரணை) என்னும் பெயரில் நூற்றுக் கணக்கில் சிறைப் பிடித்துக் காவலர்களைக் கொண்டு அச்சுறுத்தியும், அடித்தும், உதைத்தும், 'சித்திரவதை'கள் செய்தும் தம் விருப்பப்படி அடாவடித் தனமான அதிகாரவெறி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

—இவ் வகையில் தமிழின மக்களின் உரிமை எழுச்சிகளையும் அவர்களின் மொழி, இன, நாட்டு விடுதலை உணர்வுகளையும் சிதைத்துத் சீரழித்து, அவர்களை என்றென்றும் பார்ப்பனியத்திற்கும், வடநாட்டு இந்தி வெறி முதலாளியத்திற்கும் அடங்கி ஒடுங்கும் நிலையான அடிமைத் தனத்திலும், அறியாமைச் சேற்றிலும் கிடந்து உழலுமாறு செய்து, தம் பரம்பரைப் பச்சைப் பார்ப்பனீய,வருணச்சரம அரசியல் செயல்பாடுகளைத் துணிவாகச் செய்து வருகிறார்.

—இரும்புத்திரை போட்ட நாடு என்று பேசப் பெற்று வந்த, மார்க்சீயத்திற்கே மூல முதலாகவும்,வித்தும் வேருகவும் இருந்த பொதுவுடைமை நாடான உருசிய ஒன்றியத்திலேயே, இன்று மொழி, இன, கலை, பண்பாட்டு உரிமைகள் கருதித், தனியாட்சிப் பிரிவுகள் உருவாகி வரும் இந்த நிலையில்,

—சிங்கள ஆட்சியின் கொடுமைகளினின்று மீண்டு தனி நாடு கோரி அடைக்கலம் புகுந்த தமிழீழ விடுதலைப் போராளிகளை இங்குச் சிறைப் படுத்துவதையும், துன்புறுத்துவதையும், நாட்டை விட்டு விரட்டும் நடவடிக்கைகளையும் கண்டித்து, அவர்களை மாந்தத் தன்மையுடன் நடத்த வேண்டும் என்னும் கோரிக்கை அடிப்படையில், அவர்களுக்கு ஆதரவாக, வேலூரிலும், சென்னையிலும், அம்பத்தூரிலும், பண்ணுருட்டியிலும், கடலூரிலும், புதுச்சேரியிலும், மதுரையிலும், திருச்சியிலும், நெல்லையிலும், காஞ்சிபுரத்திலும்—தமிழ் இளைஞர்களும் தமிழ் இன உரிமை இயக்கங்களின் தலைவர்களும், தொண்டர்களும் கூட்டிய மாநாடுகளையும், கூட்டங்களையும், கண்டனப் பேரணிகளையும் செய்தியாளர் நேருரை நிகழ்ச்சிகளையும் காவலர்களை விட்டுத் தடை செய்ததுடன், அவர்களைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ச் சிறைப்படுத்தியும் கொடுமைப் படுத்தியும்,

—இவ் வகையில், இனி எவரும் எழுந்து இயல்பாகச் செயல்படாதவாறு அச்சுறுத்தியும் வருகிறார்.

இம் முயற்சிகளில் இறுதியாகக் கடந்த 13-9-91-இல் சென்னையில் மக்கள் உரிமைக் கழகத் தலைவரும், தலைசிறந்த வழக்கறிஞரும் ஆகிய பி.வி.பக்தவத்சலம்—அவர்கள் நடத்திய செய்தியாளர் கூட்டத்தைத் தடை செய்ததுடன் அவரையும் பிடித்து சிறைப் படுத்தியுள்ளார், முதல்வர் செயலலிதா.

இவ்வாறு இந்திய அரசின் அமைப்பியல் சட்டத்தில் மக்களுக்குத் தரப்பட்டுள்ள பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் போடும் உரிமைகளுக்கு மாருகவும் எதிராகவும் உலக ஒன்றிய அமைப்பு (ஐ.நா. பேரவை)—ஒரு நாட்டின் அரசியல் இனவியல் கொடுமைகள் தாளாமல் அண்டை அயல் நாடுகளில் அடைக்கலம் புகும் ஏதிலி (அகதி) களுக்குத் தரும் வாழ்வியல், உயிரியல் உரிமைகளுக்கு வேருகவும் இயங்கும் தமிழக முதல்வர் செயலலிதாவையும், அவர் அரசின் கொடுங்கோல் நடவடிக்கைகளையும் மிக மிக வன்மையாகவும், கடுமையாகவும் நாம் கண்டிப்பதுடன்,

—இக்கொடுமையான மக்கள் உரிமையியல் சட்டங்களை அவமதிக்கும் வகையில், அவற்றிற்கு மாருக இயங்கிவரும் தமிழ்நாட்டு அரசின் படுகொலை அரசியல் போக்கைத் தடுத்து நிறுத்திட இங்குள்ள மக்கள் உரிமை மீட்பு அமைப்புகளும், குடி நாயகத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் இயக்கங்களும், மக்கள் நலம் விரும்பும், நடுநிலை அரசியல் கட்சிகளும், மாணவர்—இளைஞர்களும், பேரவைகளும் ஒருங்கிணைந்து உடனடியாக ஓங்கிக் குரல் கொடுக்க வேண்டும் என்றும், கேட்டுக் கொள்கிறேன்.

உரிமைக் கதவை, அவ்
வொரு நாள் வரும் வரை
உரத்த கைகளால்
ஓங்கித் தட்டுவோம்!

நரிமைக் கயவர்கள்
திறவா விடில் அதை
நானூறு சில்லுக—
ளாய் உடைத் தெறிவோம்!

14-9-91
சென்னை-5

பெருஞ்சித்திரனார்.
முதல்வர், உ. த.மு.க.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

Scanned with CamScanner

செய்திகள்!

1. தமிழீழ ஆதரவு மாநாடு-வேலூர்(வ.ஆ.)

செயலலிதா தமிழக முதல்வராகப் பதவியேற்ற உடனேயே, நீண்ட நாள்களாக அவருக்கும் இந்திராப் பேராயத்திற்கும் தமிழீழப் போராளிகள் குறிப்பாக விடுதலைப் புலிகள் மேல் கொண்ட வெறுப்பையும் பகையையும் மனத்தில் வைத்துக் கொண்டும், இராசீவின் மறைவைச் சாக்காகக் கொண்டும், விடுதலைப் புலிகளைத் தமிழகத்திலிருந்து ஒழித்துக் கட்டும் அல்லது துன்புறுத்தி வெளியேற்றும் நடவடிக்கையையே முதலாவ்தாகவும் முகாமையானதாகவும் எடுத்துக் கொண்டார். அத்துடன் அவர்களின் தமிழீழப் போராட்டத்திற்குத் துணையாய் இருந்த, ஆதரவாகக் கருத்துக் கூறிய தமிழகத்தில் உள்ள தமிழின வுணர்வாளர்கள், தமிழக விடுதலை யுணர்வுள்ளவர்கள் மீதும் தம் கவனத்தைத் திருப்பிக் காவலர்களைக் கொண்டு, அவர்களை மிரட்டியும், சிறைப் பிடித்தும், கொடுமையான நடவடிக்கைகளை எடுத்துச் செயல்படத் தொடங்கினர்.

இந் நிலையில், தமிழகப் பொது நல உணர்வாளர்களும், தமிழர் நலம் கருதிய பிற இயக்கத்தவர்களும் என்ன செய்வது என்று அறியாமலும், எவ்வாறு தங்களின் எதிர்ப்பைக் காட்டுவது என்று தெரியாமலும் திகைத்தும் அஞ்சியும் தயங்கிக் கொண்டும் இருந்த பொழுது, முதன் முதலாக தமிழ் நாடு இளைஞர் பேரவை, தமிழ் நாடு மாணவர் பேரவை ஆகிய இரண்டு அமைபபுகளும் ஒருங்கிணைந்து, வேலூரில் கடந்த 1-9-91 அன்று, 'ஈழவிடுதலை அங்கீகரிப்பு மாநாடு' என்ற பெயரில் ஒரு மாநாட்டைக் கூட்டி, முதலமைச்சர் செயலலிதாவின் தீவிரமான நடவடிக்கைகளுக்கு ஓர் எதிர்ப்பைக் காட்ட முற்பட்டன.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காகத் தமிழியக்கத் தலைவர்கள் பலரும் அழைக்கப் பெற்றிருந்தனர். ஆனால், மாநாடு நடைபெற விருந்த நாளுக்கு முன்னிரவு 12 மணியளவில் மறுநாள் நடைபெற விருந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்து வீனசு விடுதியில் தங்கியிருந்த உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களையும், தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் **சியாவுதீன் அகமது** அவர்களையும், மாநாட்டுப் பொறுப்பாளர்கள் **தமிழ்முகிலன், பொழிலன், பரணந்தி** ஆகியோரையும், மாநாட்டிற்குப் பார்வையாளராக வந்திருந்த **நற்றேவன்** அவர்களையும் காவலர்கள் தளைப் படுத்தி, இரவு 3 மணியளவில் வேலூர் பாகாயம் புறக்காவல் நிலையத்தில் வைத்திருந்தனர்.

அதே போல் மறுநாள் காலை 8 மணியளவில், மாநாட்டு அரங்கத்திற்கு வந்த மயிலாடுதுறை தமிழின விடுதலைக் கழகத் தலைவர் வழக்கறிஞர் **தி.இராமதாசு**, பெரியார் மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் புலவர் **அரசமாணிக்கம்** முதலியவர்களையும், ஒரு பெண் உட்பட மொத்தம் 73 பேர்களையும் தளைப்படுத்தினர். அவர்களைத் தொடர்ந்து மாநாட்டிற்கென வந்திருந்த பிற பார்வையாளர்களை விரட்டியடித்தனர்.

இவர்கள் அனைவரையும், ஒரு நாள் முழுமையும் வைத்திருந்து, 1-9-91 இரவு 9 மணியளவில, முகவரிகள் எழுதிக் கொண்டும், படங்கள் எடுத்துக் கொண்டும் விடுதலை செய்தனர்.

இம் மாநாட்டிற்காக அறிக்கைகளையும் சுவரொட்டிகளையும் அடித்தார் என்று, புதுவையில் உள்ள, தமிழ் நாடு இளைஞர் பேரவை அமைப்புக் குழு உறுப்பினரும், புதுவை, மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் செயலரும் ஆகிய சுகுமாரனையும், அச்சக உரிமையாளர் இருவரையும் கடந்த 3-9-91 அன்று பிடித்துச் சில நாள்கள் சிறையில் வைத்திருந்து பின்னர் பொறுப்பில் விடுவித்துள்ளனர்.

2. தமிழர் பாதுகாப்பு மாநாடு—சென்னை.

வேலூர் மாநாட்டை அடுத்து, சென்னையில், கடந்த 8-9-91 ஞாயிறு காலை 10 மணியளவில், தலைநகர் தமிழ்ச் சங்கம் என்னும் அமைப்பின் சார்பாக, 'தமிழர் பாதுகாப்பு மாநாடு' என்னும் பெயரில், சென்னை, அண்ணாசாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் மாவட்ட நடுவண் நூலக அரங்கில் ஒரு மாநாடு நடை பெற்றது.

இம் மாநாட்டிற்கு முனைவர் **சாலினியார்** அவர்கள் தலைமை தாங்கினார். புலவர் **த.சுந்தரராசன்** அவர்கள் வரவேற்புரை யாற்றினார். இதில் திருவாளர்கள் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**, முனைவர் **சாலை இளந்திரையனார்**, **அரு கோபாலன்**, உவமைப் பாவலர் சுரதா, செல்வி அருள்மொழி, புலவர் வெற்றியழகன், இர. வையத்தரசு, நெல்லை இராமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் புலவர் பி.சி.கணேசன் நன்றி கூறிட மாநாடு பகல் 1 மணியளவில் நிறைவுற்றது. மாநாட்டில், தமிழீழத்தவர்களுக்காக ஆதரவு தெரிவித்த பலரை அரசு சிறைப் பிடித்ததைக் கண்டித்தும், அவர்களை விடுதலை செய்ய வேண்டுகோள் விடுத்தும் கூறப் பெற்ற ஒரு தீர்மானம் உட்பட, வெங்காளூரில் திருவள்ளுவர் சிலை வைக்க கன்னடர் எதிர்ப்பதைக் கண்டிக்கும் தீர்மானம், தமிழ் நாட்டில் உள்ள ஆங்கில மழலையர் பள்ளிகளைத் தமிழ்ப்

தமிழகத் தொல்பொருள் ஆராய்ச்சி

திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த கரூரில் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட உரோமப் பேரரசின் (Roman Empire) காசுகள் பல அங்குள்ள பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. உரோமப் பேரரசர்களான மார்க்கசு (Marcus), கிளாடியசு (Claudius), தைபீரியசு (Tiberius) ஆகியோரின் படங்களைக் கொண்ட, ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இக் காசுகள், கழகக் காலத் (சங்க காலத்) தமிழர்கள் ஐரோப்பியருடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்த வரலாற்றை மெய்ப்பித்துக் காட்டுகிறது.

வேறு எந்த நாட்டிலாவது இத்தகைய பழைய காசுகள் கண்டெடுக்கப்பட்டிருக்குமானால், அந் நாட்டு அரசு உடனடியாகக் கோடிக் கணக்கில் பணம் செலவு செய்து, அக் காசுகள் கண்டெடுக்கப்பட்ட விடங்களை ஆழத் தோண்டி, வேறென்ன தொல் பொருட்கள் புதைந்து கிடைக்கின்றன என்று பார்த்திருக்கும். வட இந்தியாவிலே, வட இந்தியரைப்பற்றித் தொல் பொருட்கள் கண்டெடுக்கப் பட்ட போதெல்லாம், தில்லியரசு (நடுவணரசு) பல கோடிப் பணஞ் செலவிட்டு அகழ்வுகள் செய்தது. ஆனால் தமிழரின் வரலாற்றுச் சின்னங்கள் கரூரில் கண்டெடுக்கப் பட்டபின்னும், தில்லியரசு ஓர் உருபா கூட செலவிட முன்வரவில்லை. (இதை மாற்றாந்தாய் மனப் பான்மை என்று நாம் கூறுவோமானால், அதில் என்ன தவறிருக்க முடியும்?)

தமிழரின் வரிப் பணத்தைக் கோடிக் கோடியாக வாங்கிச் செல்கின்ற தில்லியரசு (நடுவணரசு), அவற்றில் ஒரு சிறு பகுதியையேனும் தமிழரின் வரலாற்றுச் சின்னங்களை வெளிக்கொணரும் ஆய்வுக்கெனக் கொடுக்காதது நம் உள்ளத்தில் தீக்கனல் மூட்டுகின்றது.

நாம் தில்லியரசுக்குச் சொல்லிக் கொள்ளுவதிது: தமிழகத்திலுள்ள கரூர், கங்கை கொண்ட சோழபுரம், கொற்கை, பூம்புகார் ஆகிய இடங்களில், மண்ணுக்குள்ளும், கடலுக்குள்ளும் தமிழரின் வரலாற்றுச் சின்னங்கள் புதைந்து கிடக்கின்றன. அவற்றை அகழ்ந்தெடுக்கவும், அவற்றைத் தொல் பொருளியல் (archeology) முறைப்படி ஆராய்ச்சி செய்யவும், தோண்டியெடுக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களைத் தமிழரும், பிறரும் கண்டு மகிழுமாற்றான் **தமிழ்த் தொல்பொருள் கண்காட்சிக் கூடம்** (Tamil Archeological Exibition) ஒன்று தமிழகத்தில் நிறுவவும், தில்லியரசு உடனடியாகக் குறைந்தது 50 கோடி உருபாவாவது, தமிழ்நாட்டு மாநிலத் தொல் பொருள் துறைக்கு (State archeology Department) கொடுத்திட வேண்டும். (இந்தி மொழி வளர்ச்சிக்காகவும், இந்தி திணிப்புக்காகவும் ஆண்டுக்கு ஆயிரம் கோடி உருபாவுக்கு மேல் செலவு செய்கிற தில்லியரசு, குறைந்தது ஐம்பது கோடி உருபா கேட்கவில்லை. தொகு தொத்தமாக ஐம்பது கோடி உருபா கேட்கிறோம். அவ்வளவே.) கிடைத்தற்கரிய தமிழரின் வரலாற்றுச் சின்னங்களைத் தோண்டி யெடுக்கவும், பாதுகாக்கவும் செலவிட வேண்டுமென்று கேட்கிறோம். ஆண்டு தோறும் பல்லாயிரக் கணக்கான உருபாவைத் தமிழகத்திலிருந்து எடுத்துச் செல்கின்ற தில்லியரசு, அதில் ஒரு மிகச் சிறிய பகுதியையே—50 கோடி உருபாவைத்—தர வேண்டுமென்று கேட்கிறோம்.)

இதற்கான முயற்சியில் தமிழகத்தின் அ.தி.மு.க. அரசும், முதலமைச்சரும் முன்னின்று, முனைப்பாக ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அ.தி.மு.க. அன்பர்கள் இது குறித்துக் கட்சித் தலைவர்கட்கும், அமைச்சர்கட்கும் வேண்டுதல் விடுப்பார்களாக!

-தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா

செய்திகள்!...

பள்ளிகளாக மாற்றக் கோரும் தீர்மானம், தமிழக அரசு ஆணைகளை ஆங்கிலத்திலன்றித் தமிழிலேயே பிறப்பிக்கக் கோரும் தீர்மானம், தமிழ்க அரசு எல்லாப் பள்ளிகளிலும் தமிழப் பாடத்தைக் கட்டாயமாகச் செய்ததைப் பாராட்டும் தீர்மானம் ஆகியவை நிறைவேற்றப் பெற்றன.

3. தமிழீழ ஆதரவு மாநாடு—அம்பத்தூர்.

'தமிழீழ அகதிகளை வெளியேற்றாதே' 'தமிழீழப் போராளிகளை இழிவு படுத்தாதே'—என்னும் கோரிக்கைகளை முன்வைத்து, கடந்த 8-9-91 அன்று காலை, சென்னை அம்பத்தூரில், மக்கள் உரிமைக் கழகம், மக்கள் கலாச்சாரக் கழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சியம்—இலெனியம்) தமிழ்நாடு அமைப்புக்குழு—ஆகியவற்றின் சார்பில் ஒரு மாநாடு நடைபெற இருந்தது. ஆனால் இந்த மாநாட்டையும் தமிழக அரசு தடை செய்து 63 பேர்களைச் சிறை செய்து ஒரு நாள் வைத்திருந்து அன்று இரவு 10 மணியளவில் விடுவித்தது. இதில் 6 பெண் தொண்டர்களும் இருந்தனர்.

(இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் செய்தியாளர் கூட்டத்தைக் கூட்டினர் என்று மக்கள் உரிமைக் கழகத் தலைவரும், உயர்நெறி மன்ற வழக்கறிஞரும் ஆகிய தோழர் பி.வி.பக்தவத்சலத்தை அரசு பல குற்றவியல் சட்டங்களின் கீழ் சிறைப்படுத்தியது. அது தொடர்பான கண்டன அறிக்கை இவ்விதழில் வேறொரு பக்கத்தில் அச்சாகியுள்ளதையும் கண்டு கொள்க.)

Scanned with CamScanner

ஆரவார ஆடம்பர... தொடர்ச்சி

வர்கள் நன்கு தெளிந்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நாம் கூறுகின்ற உண்மை அவரின் காவிரி நீர்த்தீர்வு முயற்சிக்கு, தலைமையமைச்சர் நரசிம்ம ராவின் நடுவணரசு ஒரு வகையில் மெத்தனமாக வும், இன்னொரு வகையில், மறைமுகமாக எதிர்ப் பாகவும் உள்ளதையும், அவரின் கச்சத் தீவு மீட்பு அறிவிப்புக்கும் அதே தலைமையமைச்சர் சுடச்சுடவும் உடனடியாகவும் மறுப்புத் தெரிவித் ததையும் ஆழ அகலமாக எண்ணிப் பார்த்தால் விளங்காமல் போகாது.

மேலும், செயலலிதாவிடம் ஏதேனும் கொஞ்ச நஞ்சம், நாம் மதிக்கும் வகையில், துணிவும், மக்கள் நலச் சீர்திருத்த உணர்வும் ஓரளவு உள்ளன வென்றாலும், அவரிடம் அல்லி அரசாணிக்கிருந்த அகப்பாவமும், அரக்கத்தன மும், ஆரவாரமும், ஆடம்பரமும், தன்னதிகார மூப்பும் மலிந்து கிடப்பதைப் பார்த்தால், இவர் அவ் வகையில் கலைஞர் கருணாநிதியை விட வேக மான வீழ்ச்சிக்கே விரைந்து செல்கின்றார் என் பதைக் கணித்து விடலாம்.

இவரின் அண்மைக் கால, விடுதலைப் புலிக ளின் மேல் கொண்ட வேட்டை நடவடிக்கைகளை யும், அவர்கள் அடிப்படையில் தமிழீழ விடுதலை முயற்சிக்குச் செய்து வரும் தடையான—தவறான செயற்பாடுகளையும், அவற்றின் வழி இங்குள்ள தனிப்பட்ட ஆதரவாளர்களுக்கும், ஆதரவு இயக் கங்களுக்கும் எதிராகி அவர் செய்த செய்து வரும் கெடுபிடி அச்சுறுத்தல் நிகழ்ச்சிகளையும், கொடு மைகளையும் நாம் எண்ணிப் பார்த்தால், மக்களை நடு நடுங்க வைக்கும் அவரின் வெருவந்தச் செயல் கள் விளங்காமல் போகா. திருவள்ளுவப் பேராச னின் வெருவந்த செய்யாமை என்னும் திருக் குறள் அதிகாரத்தில் கூறப் பெறும் அறிவுரை களை, இற்றை நிலையில் இவரின் பார்வைக்கு வைக்கின்றோம்.

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். (586)

(இதன் உரை: அரசன் பொது மக்களை நோக்கிக் கூறும் கடுமையான அச்சுறுத்தல் போன்ற உரை களும், அவற்றின் வழி, தன் கையிலுள்ள அதிகா ரத்தைத் தனக்குக் கீழான அதிகாரிகளிடம் தந்து, அவர் வழி மக்கள் பெறும் தண்டனைகளும், அவ னின் வெற்றித் திறனைத் தேய்த்து அழிக்கும் அர மாகும்.)

அத்துடன் இவரின் கடுங்கோன்மைச் செயல்களைக் கண்டு, ஒன்று மறியாப் பேதை அடி நிலைப் பொது மக்கள் மட்டுமே அவற்றை வியந்து விரும்பி வரவேற்கச் செய்வர் என்று பேராசான் கூறும் பொது நிலை உண்மையையும் இவர் உற்று நோக்கி, மனச் செருக்கும் வினைச் செருக்கும் கொள்ளாமல் உணர்ந்து கொள்வது நல்லது.

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை. (570)

(இதன் உரை: கடுமையான ஆட்சி முறை' கல்லாத பொது மக்களை மட்டுமே கவர்ந்து ஈர்த்துத் தனக்குச் சார்பாக ஆக்கிக் கொள்ளும், அந்த நிலைபோல் அந் நாட்டிற்குச் சுமையானது வேறு இல்லை.)

மேலும், இவர் செய்யும் ஆரவாரத்திற்கும் ஆடம்பரங்களுக்கும் அளவே இல்லை. இவர் குடி யிருக்கும் பகுதிகளில் ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருந்த பொது மக்களைப் பாதுகாப்பு என் னும் பெயரில் அப்புறப் படுத்தி அப் பகுதியையே வெறுமையாக்கியதும், இவர் அன்றாடம் சட்ட மன்றத்திற்குப் போய் வரும் வழிகள் நெடுகக் காவலர்களைக் குவித்து வைப்பதும், அவ் வழியே போய் வரும் நகரப்பேருந்துகளையும் பிற வண்டி களையும் அரை மணி நேரம் ஒரு மணி நேரம் நிறுத்தி வைப்பதும், அடாத அதிகார, ஆரவாரச் செயல்கள்! இவர் ஒருவருக்காக அத்தனைப் போக்கு வரத்துகளுக்கும் பொது மக்களுக்கும் இவ்வளவு இடர்பாடுகளை உண்டாக்க வேண்டுமோ?

இவர் ஆட்சிக்கு வந்தவுடன் முதன் முதல் செய்த நடவடிக்கைகள் அடாவடிதனமாகவும் ஆரவாரமானவையுமாகும். அவையாவன முந் தைய ஆட்சியில் கலைஞர் சில மாவட்டங்களுக்கும், போக்குவரத்துகளுக்கும் வைத்திருந்த பெயர் களைப் பழிவாங்கும் எதிர் நடவடிக்கைகளாக, மாற்றி வைத்த செயல்களாகும். இம்மாவட்டப் பெயர்களை அடிக்கடி மாற்றுவதால் பொது மக்களுக்கும் அரசுக்கும் எத்தனை இடர்பாடுகளும் பொருள் இழப்புகளும் நேர்கின்றன என்பதை ஆட்சிக்கு வருபவர்கள் யாரும் எண்ணிப் பார்ப் பதே இல்லை. பழி வாங்கும் உணர்வையும் தங்க ளின் மன வெறுப்பு விருப்புகளையுமே பெரிதாக எண்ணுகிறார்கள். கலைஞர் கருணாநிதிதான் இத் தகைய பெயர் மாற்றக் கோட்பாட்டையும் கோளாறுகளையும் முதன் முதலாக அவர் ஆட்சி யின் பொழுது தொடங்கி வைத்தார் என்றாலும் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த ம.கோ.இராமச் சந்திரனும் இக்கால் ஆட்சிக்கு வந்த செயலலிதா வும், இக் கோளாறுகளை இன்னும் பன் மடங்கு உணர்வெழுச்சியுடன் துணிவாகவும் வெட்க மின்றியும் கடைப் பிடித்தமை வெகுவாகக் கண்டிக்கத் தக்கது.

அதுவும், இவ்வகையில் தங்கள் அன்னை, தந்தை போன்ற பொது நலத் தொண்டில் ஒரு சிறிதும் ஈடுபடாதவர்களின் பெயர்களைச் சூட்டு வது என்பது மிக மிகக் கொடுமையானதும், பொறுத்துக் கொள்ள இயலாததும், தன்னலமும், தற் செருக்குமே கொண்ட செயலாகும் என் பதைப் பொது மக்கள் உணர்ந்து கொள்ளும் படி செய்தல் பொது நல இயக்கங்களின் இன்றியமை யாத தலையாய கடமையாகும். அதுவும் செயலலிதா அன்னை வெறும் ஒரு திரைப்படக்

Scanned with CamScanner

கூத்தியே! இவர் பெயரில் தொழில் கழகம் ஏற்படுத்தப் பெறுகிறது என்றால் முதலமைச்சர் செயலலிதா ஒரு முட்டாளே! அல்லது தன்னல வெறிபிடித்த படித்த முட்டாளே என்று தான் எண்ண வேண்டியுள்ளது. இவ்வுணர்வையும், அடாத இச் செயலையும் பொதுமக்களனைவரும் ஒன்று கூடி எதிர்த்தே ஆகல் வேண்டும். இன்றைய அல்லி அரசாணியின் அகம்பாவச் செயலுக்கு முடிவு கட்டியே தீர வேண்டும்.

இதுவேயுமன்றி, இவர் தாம் வென்ற பருகூர் தொகுதிக்கு முதன் முதலாகப் போகும் பொழுது, ஆயிரக் கணக்கான மகிழுந்துகள் பேரணியாகச் சென்றது காலத்திற்குப் பொருந்தாத வெற்று ஆடம்பரச் செயலே! மேலும், இவரை வாழ்த்தி வரவேற்கும் வகையில், இவரின் நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் வகையிலும் சென்னைச் சுவர்களில் அவ்வப் பொழுது இலக்கக் கணக்கான பெரும் பெரும் அளவு வண்ணச் சுவரொட்டிகளும் தென்னைமர உயர வெட்டுருவங்களும் தேவைதானா? அதனால் சென்னை நகரச் சுவர்கள் எத்துணையளவு அருவருப்பு அடைகின்றன! இந்த வகையில் இவர் ஆடம்பர விளம்பரங்கள் கலைஞர் கருணாநிதியின் விளம்பர வேட்கையையும் எடுத்து விழுங்கி ஏப்பம் விட வைப்பன. இவரின் வெறும் கொழுத்த முகத்தை மட்டும் காட்டிக் கொண்டிருக்கும் சுவரகலச் சுவரொட்டிகள், பள்ளிக்குச் செல்லும் சிறு குழந்தைகளையெல்லாம் அச்சுறுத்திக் கொண்டுள்ளதைச் சென்னைக்கு வந்து திரும்பும் மக்களின் கண்களிற் படாமற் போகா? இந்த நிலை விளம்பரமெல்லாம் எதற்கு? இவற்றுக்கு ஆகும் இலக்கக் கணக்கான பணச் செலவில் ஒரு பல்கலைக் கழகத்தையே கட்டி விடலாமே! இந்திய அரசியல் வரலாற்றில், மறைந்த தலைமையமைச்சர்கள் இந்திராவும் அவரின் செல்வ மகன் இராசீவும், மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் ம.கோ.இராவும், முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியுந்தாம் விளம்பர வெறியுடையவர்களாகக் கருதப்பட இடம் வைத்தவர்கள். செயலலிதா இந்த நிலையில் அனைவர்க்கு மேலும் சுவரொட்டி, முழு அளவு செய்தித்தாள் விளம்பர உத்திகளில் முதற்பரிசு பெறத்தக்க அளவில் சிறந்து நிற்பவராக இருப்பது பெரிதும் வருந்தத் தகுந்ததும் வெறுக்கத் தகுந்ததும் ஆகும்! இந்த வகையில் வேண்டுமானால் இவர் 'தென்னாட்டு இந்திரா' என்பதற்கு மிகப்பொருத்த முடையவராகத் தோன்றுகிறார்!

இடைக்காலத்திருந்த புகழேந்திப் புலவர் எழுதிச், செவிவழிச் சிறப்புப் பெற்ற—

நம் சிற்றூர்ப் புறக் கூத்துக் கதைகளில்—பாட்டு நாடகங்களில் 'ஆரவல்லி—சூரவல்லி' என்பதும் மக்களைக் கவர்ந்த ஒன்று! இக் கதை திரைப்படமாகவும் வெளிவந்து முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன் நீண்ட காலம் மக்களிடையே புகழ் பெற்று விளங்கியது. இஃது ஒரு பெண்கள் அரசாட்சியின் கதை! இதில் ஆரவல்லியும் அவளின் தங்கைகளும் அரசாட்சியில் அமர்ந்து வெகுவாக ஆடவர்களையும் மக்களையும் மிக மிகக் கொடுமைப் படுத்துவார்கள்! அந்த அளவுக்கு ஆரவல்லியின் அதிகாரம் நாடெங்கும் கொடி கட்டிப் பறக்கும்! இறுதியில் அவ்வரசினை அடக்க, ஓர் இளைஞன் வந்து வெற்றி பெறுவான்! நம் முதலமைச்சர் செயலலிதா அந்த ஆரவல்லி அரசியைத் தான் நினைவூட்டிக் கொண்டிருக்கிறார் என்பதில், அக் கதையை அறிந்தவர்களுக்குத் துளியும் மிகுதியான கூற்றாக இராது என்றே நம்புகிறோம்!

சிந்தனைக்கு-65

பணத்திற்காகவும் பதவிக்காகவும் எதிரியையும் இரண்டகரையும் புகழும் புன்மைச் செயலை விட மொழி, இன, நாட்டுரிமைக்காகத் தூக்கிலேயே ஏற்றுவதானாலும் போராடுவதே பெருமைக்குரியது, கடமையுணர்வுடையது.

நூல்-அஞ்சல்

பெறுநர்

TN/MS(C) 657